# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

நான்காம் தவணைப் பரீட்சை - 2021

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் I<br>Tamil I | Three hours<br>Gr -13 (2021) | 72 | T | I |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

❖ பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும்,எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

i) நெய்தல் நிலச் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

ii) தனது அழகுநலன் தொடர்பாகத் தலைவியிடம் ஏற்படும் கழிவிரக்க உணர்வு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

iii) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
வேய், விறல், நுதல், குருகு

ஆ) தழுவின புளினர் வேந்தன் தாமரைச் செங்கணானை
வழுவினும் உயர்ந்த தோனாய் எய்தியது என்னை? என்ன
முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்.

i) இச்செய்யுள் இடம் பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

ii) பரதனின் தோற்றம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

iii) இச்செய்யுளில் அமைந்துள்ள அணியை எடுத்துக்காட்டி விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

2) அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.



kalvi.lk

அ) பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே – அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ – உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திட லாமது சாம்பிடுமோ

சந்த மிகுந்திடு சிந்தென வந்தது
சார லருவிகள் போல் விழுந்தே – தமிழ்ச்
சிந்தை யுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல்

தாமரைக் காடிது நித்தமுஞ் செந்தமிழ்த
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார்.

புத்தம் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை – மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம் பிறக்குது தேரினிலே

முல்லை குறிஞ்சி இளமருதம் நல்ல
மோகனப் பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய்

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே.

i) பாரதியார் மீது பிற புலவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

ii) பாரதியாரின் சிறப்பை எடுத்துரைப்பதற்குக் கவிஞர் கையாண்ட அணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.

iii) பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் சிறப்புக்களைக் கவிஞர் எவ்வாறு குறிப்பிடுகின்றார்?

iv) இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன் இன்பம் என்றாயினும் குன்றிடுமோ – என்ற அடிகளினூடாகக் கவிஞர் கூற விழைவது யாது?

(4 x 4 = 16 புள்ளிகள்)

**அல்லது**



kalvi.lk

ஆ) இன்று வருடப்பிறப்பு – முதல் முதலில் இந்த எண்ணம் தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுள் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்து விட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு, இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு, சௌந்தரம் கல்யாணமாகி மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு தகப்பனுக்குத் தலைக்கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழித்த வருடப்பிறப்பு, பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு - இப்படிப் பல. கால ஓட்டம் அவர் தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது. முன்னர் போல் சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும். நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள், பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரர் ஆக்கியதனால் இரண்டு பாண் துண்டுகளைக் கொறிக்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவிவிட்டது. படுத்த படுக்கையாக வைக்கும் படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்கின்றார். கடைக்குட்டி மகனைப் பற்றித் தான் கொஞ்சம் கவலை. திண்ணையிற் குந்தி கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

அ) வருடப்பிறப்பையொட்டி முகத்தாரின் மனதில் பழைய நினைவுகள் எவ்வாறு மீட்கப்படுகின்றன?

ஆ) உணவுப் பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்படக் காரணம் யாது?

இ) உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

ஈ) முகத்தார் பிள்ளைகள் மீது கொண்ட பாசம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

## பகுதி – II

3) திருக்குறள் வலியறிதல் என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வலியின் பகுதியும் அதனை அறிந்து நடப்பவர் பெறும் பயனும்

ஆ) தன் வலிமை அறியாததால் ஏற்படும் இழுக்கு

இ) பொருட் செல்வத்தின் வலியறிதல்.

ஈ) கையாளப்பட்டுள்ள அணி (20 புள்ளிகள்)

4) கங்கையின் வட கரையில் நின்ற பரதனை குகன் சென்று சந்தித்தது முதல், இராமன் அங்கு காய்கனி உண்டு கல்மேல் உறங்கியதை அறிந்த பரதன் தன்னைத்தான் நொந்து கொண்டது வரையான பகுதியில்

அ) குகன் வாயிலாக வெளிப்படும் பரதனின் பெருமைகள்

ஆ) இராமன் காய்கனி உண்டு கல்மேல் உறங்கியதை அறிந்த பரதனின் மனநிலை

இ) இலக்குவன் இராமன் மீது கொண்ட அன்பு

ஈ) பயின்றுள்ள அணிகள்.

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)



kalvi.lk

5) பேராசிரியர் க. கைலாசபதியின் 'மானுடம் தழுவிய கவிஞர்கள்' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வள்ளுவர், இளங்கோ, கம்பர் பாரதி ஆகியோர் மகாகவிகள் என்பதற்கான காரணங்கள்.

ஆ) மகாகவிகளை இனங்கண்டு கொள்வதற்கான அளவு கோல்கள்

இ) பாரதி பற்றிய ஆசிரியரின் கருத்துக்கள்.

ஈ) கட்டுரையில் கையாளப்பட்டுள்ள மொழிநடை (20 புள்ளிகள்)

6) அ. ஸ. அப்துல் ஸமதுவின் 'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

அ) இஸ்லாமியப் பண்பாட்டம்சங்கள்.

ஆ) சமூக வர்க்கமுரண்பாடு

இ) ஸல்மாவின் நடப்பியல் சிந்தனைகள்

ஈ) ஆசிரியரின் மொழிநடை

என்பன பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

7) ஒரு வெண்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது. என்ற நாவலில்

அ) விவசாய மண்ணின் பெருமை

ஆ) கிராமிய வாழ்க்கை முறை

இ) காத்திருப்பு பெறும் முக்கியத்துவம்

என்பன பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

Education கல்வி அடியாபன

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) சிலப்பதிகாரத்தில் கோவலனின் மனநிலை

ஆ) கோயில் திருப்பதிகத்தில் மணிவாசகர் தான் ஆட்கொள்ளப்பட்ட அருளை வியத்தல்

இ) காரணமாலையில் மக்க மாநாட்டின் அற்புதங்கள்

ஈ) தேம்பாவணி காட்சிப்படலத்தில் இயேசு பாலனைக் கண்ட இடையர்களின் நிலை

உ) 'இரு துயரங்கள்' நாடகத்தில் டொக்றர் கந்தப்பு என்ற பாத்திரத்தின் நடத்தை மூலம் வெளிப்படுத்தப்படும் மனித இயல்புகள்.

(20 புள்ளிகள்)



kalvi.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Center, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| | | | |
|---|---|---|---|
| தமிழ் II<br>Tamil II | Three Hours<br>Gr -13 (2021) | 72 | T | II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

- பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. நுனிநா பல்லோடு பொருந்த உச்சரிக்கப்படும் சொல்.
   1) ஆடு 2) யான் 3) பொந்து 4) காய் 5) வல்லவர் ( )

2. இரண்டு உயிர்களுக்கிடையில் ற கர ஒலி இடம் பெறும் சொல்.
   1) வெற்றி 2) நன்றி 3) சொற்கள் 4) சோறு 5) கன்று ( )

3. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்.
   1) வெறுமை 2) செய்கை 3) கருமை 4) இரக்கம் 5) தோற்றம் ( )

4. முற்றாய்தம் இடம் பெற்ற சொல்.
   1) மு.்.மீது 2) ப.்.றொடை 3) எ.்.கு 4) ப.்.றுளி 5) அ.்.றிணை ( )

5. அண்மையில் உள்ளதைச் சுட்டப்பயன்படும் சுட்டெழுத்து.
   1) அ 2) இ 3) உ 4) எ 5) ஒ

6. பின்வருவனவற்றுள் புணர்ச்சியின் போது வல்லினமிகுந்து வரமுடியாத சொல்.
   1) முக்கிய செய்திகள் 2) தலைப்பு செய்திகள் 3) வெளிநாட்டு செய்திகள்
   4) விளையாட்டு செய்திகள் 5) சினிமா செய்திகள் ( )

7. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டும் சொல்.
   1) கூவியது 2) தூங்கினான் 3) பெற்றான்
   4) கூடினார்கள் 5) வாடினான் ( )

8. பின்வருவனவற்றுள் மெல்வினை
   1) வெல்வோம் 2) பார்ப்போம் 3) உண்போம்
   4) படிப்போம் 5) இருப்போம் ( )

9. நீங்கள் பாடுங்களேன் என்பது.
   1) விருப்பு ஏவல் 2) கடப்பாட்டு ஏவல் 3) எதிர்மறை ஏவல்
   4) வியங்கோள் வினை 5) குறிப்பு வினை ( )



kalvi.lk

10. நீங்காத நினைவுகள் - இங்கு நீங்காத என்பது.
1) எதிர்மறைத் தொழிற்பெயர் 2) எதிர்மறைப் பெயரெச்சம் 3) எதிர்மறை வினையெச்சம்
4) எதிர்மறை வினைமுற்று 5) எதிர்மறை நிபந்தனை வினையெச்சம் ( )

11. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையடிகள் மட்டும் கொண்ட தொகுதி.
1) நினை, எழுது 2) சாப்பிடு, இரு 3) பார், சிரி
4) வெட்டு, வீசு 5) துள்ளு, பாய் ( )

12. பின்வருவனவற்றுள் ‘அல்’ விகுதி பெற்றமைந்த தொழிற் பெயர்.
1) போதல் 2) சாய்தல் 3) உண்ணல் 4) பாய்தல் 5) விரைதல் ( )

13. பின்வருவனவற்றுள் ‘உம்’ இடைச்சொல் எச்சப்பொருளில் இடம் பெற்ற வாக்கியம்.
1) மழை பெய்தாலும் நிலம் நனையவில்லை.
2) மழை பெய்தாலும் பெய்யும்.
3) மழையும் வெயிலும் மாறி மாறி வந்தன.
4) நாளைக்கும் மழை பெய்யும்.
5) அனைத்துக்கும் மழையே ஆதாரம். ( )

14. அழகாக மலர்ந்தது – அழகாக என்பது.
1) தனிப்பெயரடை 2) தனிவினையடை 3) கூட்டுப்பெயரடை
4) கூட்டு வினையடை 5) வினையெச்சம் ( )

15. பின்வருவனவற்றுள் விகுதி காலம் காட்டும் சொல்.
1) வருக 2) செய்தேன் 3) வரும் 4) பார்த்தோம் 5) வென்றனர் ( )

16. குயில் கூவியது இனிமையாக இருந்தது. இங்கு கூவியது என்பது.
1) தொழிற்பெயர் 2) கூட்டுப்பெயர் 3) ஆக்கப்பெயர்
4) வினையாலணையும் பெயர் 5) மாற்றுப்பெயர் ( )

17. பெரும் வெள்ளம் காரணமாக மக்கள் இரவோடு இரவாக இடம்பெயர்ந்து சென்றனர். இங்கு ஓடு உருபு உணர்த்தும் பொருள்.
1) அடைமொழிப்பொருள் 2) கலப்புறு பொருள் 3) கூட்டல் பொருள்
4) ஓரிடத்தில் தொடர்ந்திருத்தல் 5) வினையடையாக்கி ( )

18. தோகை ஆடியது என்பதில் வந்துள்ள ஆகுபெயர்.
1) கருவியாகுபெயர் 2) உவமையாகுபெயர் 3) சினையாகுபெயர்
4) பொருளாகுபெயர் 5) தொழிலாகுபெயர் ( )

19. பெயரடிகளைக் கொண்ட வினைகள்.
1) எழுதுவேன் இருப்பான் 2) கதைத்தார் பயந்தேன் 3) போன்றது ஒப்பான்
4) சான்றான் மாண்டது 5) மகிழ்ந்தான் இன்புற்றான் ( )

20. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்.
1) நான் அப்பாவுடன் ஊருக்குப் போனேம்.
2) நானும் அப்பாவும் ஊருக்குப் போனோம்.
3) நான் ஊருக்குப் போய் அப்பாவைப் பார்த்தேன்.
4) நான் அப்பாவைப் பார்க்க ஊருக்குப் போனேன்.
5) நான் அப்பாவுடன் ஊருக்குப் போகப்போகிறேன். ( )

(01 x 20 =20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

2\) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

சிறுகதை தனக்கென ஒரு கட்டுக்கோப்பையும் வளர்ச்சியையும் உடையது. அது நாவலிலிருந்து நீளத்தால் மாத்திரம் வேறுபடுவதன்று. பொது அமைப்புப் பாங்கிலும் வளர்ச்சியிலும் வேறுபடுகின்றது. நாவலாசிரியன் ஆறுதலான போக்கிலே கதையை நகர்த்திச் செல்வான். இடையிடையே காட்சிகளை வருணிப்பதற்கும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கும் பாத்திரங்களின் செயல் நோக்கங்களையும் உள்ளுணர்வுகளையும் எடுத்துக்காட்டுவதற்கும் மற்றொன்று விரித்தலாகப் பல பக்கங்களை எழுதிச் செல்வான். ஆனால் சிறுகதை எழுத்தாளனோ ஒரு சூழ்நிலையின் அல்லது பாத்திரத்தின் யாதாயினுமோர் அம்சத்தைத் தேர்ந்தெடுத்து அதனை மிகுந்த செறிவான முறையிலே வாசகருக்கு முன்வைக்கின்றான். பொதுவாக ஒரு பாத்திரத்தின் குறித்த ஒரு குணவியல்பிலே அல்லது ஒரு தனிச்சம்பவத்திலே விபரங்களைக் குவியவைத்துக் காட்டுவான்.

சிறுகதையானது அளவிற் சிறிதாயும் திட்டவட்டமான வடிவமுடையதாயும் இருந்தபோதும் எழுத்தாளரின் திறமையினால் பல்விகற்பப்பாங்குகளைப் பெற்றுள்ளது. ரஷ்ய, ஜேர்மனிய, பிரெஞ்சிய ஆங்கிலேய, ஸ்பானிய, அமெரிக்கச்சிறுகதை எழுத்தாளர்கள் தத்தமக்குச் சிறப்பான தனிப்பாணிகளிலே சிறுகதை இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். ஆரம்ப காலத்தில் ஐரோப்பிய முன்மாதிரிகளைப் பின்பற்றித் தமிழிலும் சிறுகதை இலக்கியம் இடம்பெற்றதாயினும் இன்று அது தமிழிலே தனிச்சிறப்புடன் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.

சிறுகதை இலக்கியத்தில் முக்கியமாக இருவகைகளைக் குறிப்பிடலாம். முதலாவது வகையிலே ஒரு தனி நாடக விளைவை உருவாக்குவதிலே எழுத்தாளன் முழுக்கவனத்தையும் செலுத்துகின்றான். மற்ற வகையில் வடிவத்தை நிறைவாக்குவதில் அழுத்தங் கொடுக்கப்படாமல் உள்ளடக்கத்துக்கே முதன்மை கொடுக்கப்படுகின்றது. சிறு கதையின் வடிவத்தில் ஒன்று குறுஞ்சிறுகதை. இது சிறுகதையின் மிகச்செறிவான வடிவமாகும். இதிலே ஒரு தனி நிகழ்ச்சி அல்லது பிரச்சினை எடுக்கப்பட்டு பெரும்பாலும் வியப்பூட்டும் விதமாக முடிக்கப்படும் மற்றையது சிறுகதையும் கட்டுரையும் கலந்த கலப்பு வடிவமாகும். சிறு செறிவான கருவைக் கொண்ட கதையாக அமையாமல் பெரும்பாலும் ஒரு வரலாற்றுக் கதைபோல் காணப்படும்.

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உலகமயமாக்கலும் தொழில்நுட்ப வளர்ச்சியும் இன்று மொழிபெயர்ப்பின் தேவையினை அதிகரித்துள்ளன. உலக மக்களிடையேயான தொடர்புகள் இன்று மிகவும் அதிகரித்துள்ள நிலையில் மொழிபெயர்ப்பு மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. உலகக் கிராமத்தின் உதயமானது இன்று மொழி என்ற வரம்பைக் கடந்து மக்களிடையே கருத்தாடல் வளர்ச்சி ஏற்பட வழியமைத்து விட்டது. எனவே மொழிபெயர்ப்பும் இன்று மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' எனப் பாடினான் பாரதி. மேனாட்டிலே மிகச் சிறப்பாக வளர்ந்துள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் யாவும் இன்று தமிழில் வரவேண்டுமானால் மொழிபெயர்ப்பு அவசியமானது. இவ்விடத்திலே தான் பிறமொழிகளைக் கற்றுணர்ந்த தமிழறிஞர்களது. மொழிபெயர்ப்புப்பணி முக்கியத்துவம் பெறுகின்றது. கீழைத்தேய மொழிகள் ஆன்மீகத்தினதும் கலைகளினதும் ஊற்றாக விளங்குகின்றன எனினும் நவீன தொழில்நுட்ப உலகின் ஊற்றுக்களாக விளங்குவது மேலைத்தேச மொழிகளே எல்லா மேலைத்தேச மொழிகளையும் எல்லோரும் கற்றல் என்பது மிகவும் கடினமான செயலாகும். எனவே மேலைத்தேய அறிவியலை நமது சமூகம் உள்ளீர்த்துக் கொள்வதற்கான ஒரே வழி மொழிபெயர்ப்பே ஆகும். மொழி வல்லுனர்களான அறிஞர்கள் இம்முயற்சியில் அக்கறை காட்டுவது எமது சமூகத்திற்குச் செய்யும் ஓர் உன்னத பணியாகும். விஞ்ஞானம், தொழில்நுட்பம். கணிணி போன்றவற்றைக் கற்பதற்கு இன்று ஆங்கிலம் மிகவும் அவசியமாக விளங்குகின்றது. இதற்குக் காரணம் இத்துறைகளில் மொழிபெயர்ப்பு போதியளவுக்கு வளர்ச்சி காணவில்லை என்பதாகும். குறிப்பாகத் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய குறைபாடு அதிகம் காணப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப யுகத்தை நோக்கி உலகம் முன்னேறிவருகிறது. இத்தகைய தொழில்நுட்பப் புரட்சி காரணமாக உலக மக்களிடையே அறிவுத்தேடல் அதிகரித்து உள்ளது. அறிவுப்பிரவாகம் ஒன்று ஏற்பட்டுள்ளது. உலக மக்களின் இந்த அறிவுத்தேடலுக்கும் மொழிபெயர்ப்பு உதவலாம் என்பது பலரதும் அபிப்பிராயமாகும். பிறமொழி நூல்களை மொழிபெயர்ப்பதன் மூலமாக இத்தேவை ஈடுசெய்யப்படலாம்.

அ) மொழிபெயர்ப்பின் தேவை அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் எவை?

ஆ) கீழைத்தேச மொழிகளின் சிறப்பு யாது?

இ) மேலைத்தேச மொழிகளின் சிறப்பு யாது?



kalvi.lk

ஈ) மொழி வல்லுனர்களின் உன்னத பணியாகக் குறிப்பிடப்படுவது எது?

உ) விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிணி போன்றவற்றைக் கற்பதற்கு ஏன் ஆங்கிலம் அவசியமாகின்றது?

ஊ) தொழில்நுட்பப் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள் எவையெனக் குறிப்பிடப்படுகின்றன?

(12 புள்ளிகள்)

(13+12=25 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) இணைப்பாடவிதான செயற்பாடுகளும் மாணவரின் ஆளுமை விருத்தியும்
ஆ) ஊடகங்களும் கல்வி வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பும்
இ) இலங்கையின் சுற்றலாத்துறையை விருத்தி செய்வதன் அவசியம்.
ஈ) இன்று தமிழ்மொழி எதிர்நோக்கும் சவால்கள்.
உ) மெய்ப்பொருள் காண்பது அறிவு (25 புள்ளிகள்)

## பகுதி II

4) அ) பதினெண் கணக்கு நூல்களை வகைப்படுத்துக.
ஆ) இக்காலத்தில் அறநூல்கள் அதிகளவில் எழுந்தமைக்கான காரணங்களை ஆராய்க.
இ) தமிழ் இலக்கிய வரலாற்றில் இளங்கோவடிகள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(15 புள்ளிகள்)

5) அ) 'சோழப்பெருமன்னர் கால சமூக, அரசியல் பின்னணி அக்கால இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுத்தது' ஆராய்க.
ஆ) சோழர்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் எவை?
இ) அச்சிற்றிலக்கியங்களின் பொதுப்பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

6) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களின்
அ) பொருள் மரபு
ஆ) செய்யுள் மரபு
இ) மொழி மரபு
சார்ந்த பண்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

7) பின்வருவோரில் யாதேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.
அ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
ஆ) பேராசிரியர் வி.செல்வநாயகம்
இ) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
ஈ) டொக்ரர் நந்தி (15 புள்ளிகள்)

8) அ) i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
வேலையில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு வந்தபின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த கண்ணன் மீண்டும் உற்சாகம் கொண்டான்.

ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்றவகையில் திருத்தி எழுதுக.
மிகவும் விரிவானதும் பயன்பாடு மிக்கதும் பலராலும் அறியப்படாததுமான செய்திகளுக்கு செய்தித்தாள்கள் முக்கியத்துவம் வழங்குகின்றன.

iii) பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலைகளைத் தருக.
எண்ணித் துணிக கருமம்

iv) பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
அன்னை தெரஸா 1979 ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்றார்.

v) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளை இனங்கண்டு திருத்தி எழுதுக.
1. மனநல மருத்துவமனையில் இருந்து சித்த சுவாதீனமுள்ள நோயாளிகள் தப்பி ஓடினர்.
2. காணாமற் போன விலைமதிப்பற்ற ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.

(10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
i) ஆறாம் வேற்றுமை
ii) 'ஏ' கார இடைச்சொல்
iii) ஏவல் வினை (05 புள்ளிகள்)



kalvi.lk